# பன்னிரெண்டாம் வகுப்பு

## மாதிரி வினாத்தாள்கள்
## Model Question Papers

| | | |
|---|---|---|
| தமிழ் | 12 | Tamil |
| ஆங்கிலம் | | English |
| இயற்பியல் | | Physics |
| வேதியியல் | | Chemistry |
| உயிரியல் | | Biology |
| கணினி அறிவியல் | | Computer Science |

உருவாக்கம்
ஆலோசகர் அலுவலகம்
அரசுத் தேர்வுத் துறை வளாகம்,
சென்னை - 600 006

வெளியிடுவோர்
தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம்,
சென்னை - 600 006

Scanned by CamScanner

# மாதிரி வினாத்தாள் - I
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## பொதுத் தமிழ்

**கால அளவு: 15 நிமிடங்கள் +3 மணி நேரம்** **மொத்த மதிப்பெண்கள் - 90**

**அறிவுரை** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

**குறிப்பு:** 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி-I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **14×1=14**

**ஆ. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:-**

1. பொருத்தி விடை தேர்க:

| | |
|---|---|
| அ) உரிமைத்தாகம் | 1. பாரசீகத் கவிஞர் |
| ஆ) அஞ்ஞாடி | 2. பூமணி |
| இ) ஜலாலுதீன் ரூமி | 3. பக்தவச்சல பாரதி |
| ஈ) தமிழர் குடும்பமுறை | 4. சாகித்திய அகாதெமி. |

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

2. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"
இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ) சீர்மோனை அடி எதுகை
ஆ) சீர்மோனை சீர் எதுகை
இ) அடி எதுகை சீர் மோனை
ஈ) சீர்எதுகை அடி மோனை

3. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர்
அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

4. எழுத்தாணிகள் எத்தனை வகைப்படும்?
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

5. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல ஈ) வேளாண்மை



Scanned by CamScanner

6. வேறுபட்டதைக் குறிப்பிடுக
அ) அண்மைக் காட்சித் துணிப்பு
ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு
ஈ) காட்சி மறைவு

7. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற 'மயிலை சீனி. வேங்கடசாமி' எழுதிய நூல்.
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறிஸ்தவமும் தமிழும்

8. திட்டம் என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கு தவங்கள் எதற்காக? வரம் எதற்குக் குறியீடாகிறது?
அ) அமுத சுரபி ஆ) ஆதிரைப்பருக்கை
இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

9. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ) மண்ணில ஆ) திரைப்படம் இ) இல்லை ஈ) பின்னிரவில்

10. தொல்காப்பியர் குறிப்பிடும் 'மெய்ப்பாடு'
அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது

11. ஐராவதம் மகாதேவன் கல்வெட்டு ஆய்வில் எடுக்கப்பட்ட ஆண்டுகள்
அ) 20 ஆ) 30 இ) 40 ஈ) 20

12. தமிழல் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல்
அ) தொல்காப்பியம ஆ) புறப்பொருள் வெண்பாமாலை
இ) தொன்னூல் விளக்கம ஈ) நன்னூல்

13. கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை
அ) காண் + ட் + ஆன் ஆ) காண் (கண்) + ட் + ஆன்
இ) காண + ட + ட + ஆன ஈ) காண்டு + ஆன்

14. உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு உவமையை மட்டும் கூறுவது ______
அ) உவமை ஆ) உவமேயம இ) உத்தி ஈ) உள்ளுறை உவமம்

## பகுதி-II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்** 12×2=24

### பிரிவு-1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக**

15. சிற்பி பாலசுப்பிரமணியம் - குறிப்பு வரைக.
16. 'வாகைத்திணை' பற்றி விளக்குக
17. எவற்றை நாம் வரவேற்று விருந்தோம்ப வேண்டும் என்று 'ஜலாலுதீன் ரூமி' கூறுகிறார்?
18. உமணப் பெண்ணின் தோற்றம் பற்றிக் கூறுக.



Scanned by CamScanner

## பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. வித்தியாரம்பம் என்பது யாது?
20. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
21. திரைப்படத்துறை ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழில் என்பது பற்றி எழுதுக.

## பிரிவு-3

**எவையேனும் ஏழுனுக்கு விடை தருக**

22. பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்து எழுதுக.
    தளை, தலை, தழை
23. சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?
    திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன்
24. பேசுவார் - உறுப்பிலக்கணம் தருக.
25. பூம்பாவாய் - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
26. தொடர்நிலை என்பது யாது?
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. - வெங்காயம்.
28. எழுதும் போது ஏற்படும் பிழைகள் யாவை?
29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    வூட்டாண்ட விளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக
    மானம் பார்த்த பூமியால் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

# பகுதி-III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் .** **7×4=28**

## பிரிவு-1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
32. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டுக.
33. நெல்லின் நேரே வெண்கல் உப்பு – பண்டமாற்று வணிகத்தை இத்தொடரின் வழி விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பையும் இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

## பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் நோக்கில் அழகியல் கூறுகளில் சொற்புலம் பற்றி எழுதுக.
36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
37. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
38. அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக.



Scanned by CamScanner

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

குறிப்பு: செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண்-42க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

39. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் மூன்று நயங்கள் சுட்டுக).

அந்தியிருளவர் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீ தான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவெண் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்க்கைச் சித்தரித்த வண்ணந் தானோ?

-பாரதிதாசன்.

41. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக.
இயற்கை (அல்லது) நாடு.

42. தமிழாக்கம் தருக.

அ A White woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess, "Madam, what is the matter? The hostess asked "you placed me next to a black man give me an alternative seat" The hostess replied went away and came back a few minutes later, madam, Just as 1 thought, there are no other available seats in the economy class.

ஆ செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:
பத்தியைப் படித்துப்புரிந்து வினாக்களுக்கு விடையளி:
சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ உடற்கல்வியியல் கல்லூரியில் 42 ஆவது சென்னை புத்தகக் காட்சி நடைபெறுகிறது. தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கம் (ப பாசி) சார்பில் ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்போது 42 ஆவது புத்தகக் கண்காட்சி நந்தனம் ஒய்.எம்.சி ஏவில் ஜனவரி 4 ஆம் தேதி தொடங்கி 20 ஆம் தேதி வரை தொடர்ந்து 17 நாட்கள் கோலாகலமாக நடைபெறுகிறது. 800 அரங்குகளும், 12 இலட்சம் தலைப்புகளில் 1.5 கோடி புத்தகங்களும் இடம் பெறுகின்றன. 10% தள்ளுபடியும் வழங்கப்பட்டுள்ளது. நுழைவுக்கட்டணம் ரு.10/- வாருங்கள் புத்தகங்களை வாசிப்போம். வாழ்க்கையை நேசிப்போம்.

வினாக்கள்:

1. சென்னையில் எங்கு புத்தகக்கண்காட்சி நடைபெறுகிறது?
2. புத்ததகக் கண்காட்சி எப்போது தொடங்கி நடைபெறுகிறது? எத்தனை நாட்களாக நடைபெறுகிறது?
3. எத்தனை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன?
4. எத்தனை சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டு உள்ளது?
5. நுழைவுக் கட்டணம் எவ்வளவு?

(அல்லது)

Scanned by CamScanner

43. உங்கள் 'கனவு ஆசிரியர்' குறித்து கட்டுரை எழுதுக.

## பகுதி-IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3×6=18

44. அ. சினத்தைக் காத்தால் வாழ்க்கை மேம்படும். இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

(அல்லது)

ஆ. கவிதை எழுத அறிய வேண்டியவனவாக கவிஞர் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ. மதராசப்பட்டினம் பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் -விளக்கம் தருக.

46. அ. கோடைமழை கதை வாயிலாக மனிதப்பண்பு பற்றி விளக்குக.

(அல்லது)

ஆ. 'முதல் கல்' என்ற உத்தமசோழன் அவர்கள் எழுதிய கதை பற்றி விளக்கி எழுதுக.

## பகுதி-V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

அ. துன்புளது....என்று தொடங்கும் கம்பராமாயணச் செய்யுள் 1×4=4

ஆ. 'அறிவு' என முடியும் குறட்பா. 1×2=2

Scanned by CamScanner

# மாதிரி வினாத்தாள் - II
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## பொதுத் தமிழ்

**கால அளவு:** 15 நிமிடங்கள் +3 மணி நேரம் **மொத்த மதிப்பெண்கள் - 90**

**அறிவுரை** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

**குறிப்பு:** 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி-I

14×1=14

அ. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:
ஆ. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:-

1. பொருத்தி விடை தேர்க:

| | |
|---|---|
| அ) தமிழ் அழகியல் | 1. பரலி சு.நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | 2. தி.சு.நடராசன் |
| இ) கிடை | 3. சிற்பி.பாலசுப்ரமணியம் |
| ஈ) உய்யும் வழி | 4. கி.ராஜநாராயணன். |

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

2. மனித சமூகத்தின் அடிப்படை அலகு
அ) குலம ஆ) கூட்டம் இ) குடும்பம ஈ) பெருங்குழு

3. பழந்தமிழர் ஓர் ஆண்டை ________ பருவங்களாக வகைப்படுத்தினர்.
அ) நான்கு ஆ) ஆறு இ) எட்டு ஈ) பத்து

4. கவிஞர் சுரதா நடத்திய கவிதை இதழ் ________.
அ) இலக்கியம ஆ) காவியம இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5. நெடுநல்வாடை ________ அடிகளைக் கொண்டது.
அ) 144 ஆ) 150 இ) 188 ஈ) 196

6. **'குழிமாற்று'** எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்.
அ) இலக்கியம ஆ) கணிதம் இ) புவியியல ஈ) வேளாண்மை

7. மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள் ________.
அ) வடசென்னைப் பகுதிகள் ஆ) தென் சென்னைப் பகுதிகள்
இ) மத்திய சென்னைப் பகுதிகள் ஈ) இவை மூன்றும்



Scanned by CamScanner

8. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

9. பொருந்தாத சொல்லை அறிக

அ) உறுப்பினர் ஆ) குழுவினர் இ) இயக்குனர் ஈ) ஊரினர்

10. வெண்பாவிற்குரிய ஓசை

அ) செப்பலோசை ஆ) அகவலோசை

இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

11. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

12. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

13. உயிரெழுத்துக்கள்__________ வகைப்படும்.

அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு

14. 'முதல்கல்' என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ) பூமணி ஆ) உத்தமசோழன்

இ) பிரபஞ்சன் ஈ) நா.காமராசன்

## பகுதி-II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும் 12×2=24

### பிரிவு-1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக

15. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யாருக்கு?
16. புதுக்கவிதை என்றால் என்ன?
17. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் யாவை?
18. உப்பளம் என்றால் என்ன?

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. அக்காலத்துக் கல்வி முறையில் - மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
20. வித்தியாரம்பம் என்பது யாது?
21. சென்னையின் நீர்நிலைகளையும், வடிகால்களையும் குறித்து எழுதுக.

### பிரிவு-3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக

22. பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்து எழுதுக.

களம், கலம்



Scanned by CamScanner

23. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

24. 'வெண்பாவின்' இலக்கணம் கூறுக.

25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

26. பூம்பாவாய் - பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

27. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ. நான் சுடுதண்ணீரில் குளித்தேன்.

28. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்

29. "செவியறிவுறூஉ" துறையை விளக்குக.

30. புணர்ச்சி விதி தருக.
நன்மொழி

## பகுதி-III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்** **7×4=28**

### பிரிவு-1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. 'பங்குனி உத்திரத் திருவிழா' பற்றி திருஞான சம்பந்தர் கூறுவன யாவை?
32. 'அறிவின் மேன்மை' பற்றி திருவள்ளுவர் கூறுவன யாவை?
33. 'கடையெழு வள்ளல்களையும்' அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.
34. 'எண்வகை மெய்ப்பாடுகள்' எவை? மெய்பாட்டில் முறைப்படி விளங்கும் நூல் எது?

### பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் விளக்கி எழுதுக.
36. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டம் தருகிறது? சான்று தருக
37. இந்தோ – சராசனிக் கட்டடக்கலை குறித்து எழுதுக
38. அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக

### பிரிவு-3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண்-42க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39. 'தொழில் உவமை அணியை' எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

'எடுத்துக்காட்டு உவமை அணியை' எடுத்துக்காட்டுடன் விளக்குக.



Scanned by CamScanner

40. இலக்கிய நயம் பாராட்டுக: (ஏற்புடை நயங்கள் மூன்றினை சுட்டி எழுதுக.)

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டியிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பிவீரா

-பாரதியார்.

41. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக.
'கடல்' அல்லது 'மழை'.

42. அ. தமிழாக்கம் தருக.

1) Learning is a treasure that will follow its owner every were.
2) A New language is a new life
3) If you want people to understand you speak their language.
4) Knowledge of language is the doorway to wisdom.

**ஆ. செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:**
**பின் வரும் பத்தியை கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
நம் சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சென்னை, மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.

**வினாக்கள்:**

1. சென்னை எத்தகையது?
2. சென்னை நகர வளர்ச்சியின் சிறப்பு யாது?
3. சென்னை எதில் முன்னிலை வகிக்கிறது?
4. சென்னை எப்படி முன்னிலை வகிக்கிறது?
5. சென்னையில் அமைந்துள்ளவை எவை?

43. 'சிறு துரும்பும் பல்குத்த உதவும்'

(அல்லது)

'முயற்சி திருவினை யாக்கும்'
என்ற பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்திக் காட்டுக.

## பகுதி-IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி.** 3×6=18

44. செய்நன்றி அறிதல் அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

(அல்லது)

நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையை விளக்குக

Scanned by CamScanner

45. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பவற்றை எழுதுக.

(அல்லது)

சென்னை மாநகரின் வரலாறும் வடிவழகும் குறித்து கட்டுரை எழுதுக.

46. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக

(அல்லது)

கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகள் யாவை?

## பகுதி-V

47. பின்வரும் மனப்பாடப் பகுதிகளை அடிமாறாமல் எழுதுக

அ. ஒருமையுடன்........ என்று தொடங்கும் 'தெய்வமணிமாலை' செய்யுட் பகுதியை எழுதுக 1×4=4

ஆ. நன்று என்று முடியும் குறட்பாவை எழுதுக. 1×2=2

Scanned by CamScanner

# மாதிரி வினாத்தாள் - III
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## பொதுத் தமிழ்

கால அளவு: 15 நிமிடங்கள் +3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் - 90

அறிவுரை 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

குறிப்பு: 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி-I

அ.அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 14×1=14

ஆ.கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக:-

1. ஞாலத்தின் மாணப் பெரிது எது?

அ) செய்யாமற் செய்த உதவி ஆ) காலத்தினால் செய்த உதவி

இ) பயன்தூக்கார் செய்த உதவி ஈ) திணையளவு உதவி

2. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை

இ) நாய ஈ) யாழி

3. மாதவி பெற்ற பரிசு

அ) நூறு கழஞ்சுப் பொன் ஆ) ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப்பொன்

இ) ஆயிரம் கழஞ்சுப் பொன ஈ) நூற்றிஎட்டு கழஞ்சுப் பொன்

4. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவிவெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக் குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

5. கல்விப் பயிற்சி என்பது

அ) வித்தியாரம்பம ஆ) வித்தியாப் பியாசம்

இ) அக்ஷரப்பியாசம் ஈ) பெருக்கல் வாய்பாடு

6. ச.த சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்.

அ) பௌத்தமும் தமிழும ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்



Scanned by CamScanner

7. சரியான இலக்கணக் குறிப்பைத் தருக.

ஆடலும் பாடலும்

அ) அடுக்குத் தொடர்

ஆ) எண்ணும்மை

இ) இரட்டைக் கிளவி

ஈ) உம்மைத் தொகை

8. அருங்கானம் - இதில் பயின்றுவரும் புணர்ச்சி விதிகள்

அ) ஈறுபோதல்இ இனமிகல்

ஆ) ஈறுபோதல்இ முன்னின்றமெய் திரிதல்

இ) இனமிகல், ஈறுபோதல்

ஈ) ஈறுபோதல், ஆதிநீடல்

9. வியந்து – பகுபத பிரிப்பு முறை தேர்க.

அ) விய + த் + த் + உ

ஆ) விய + த்(ந்) + த் + உ

இ) விய + ந் + த் + உ

ஈ) விய + த் + உ

10. சரியான எழுத்து வழக்கைத் தேர்க.

அ) புள்ளைக்கு ஒடம்பு சரியில்லை.

ஆ) புள்ளைக்கு உடம்பு செரியில்லை.

இ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை.

ஈ) பிள்ளைக்கு உடம்பு சரியில்லை.

11. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க

அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறின; காகங்கள் கூவின.

ஆ வாழைத் தோப்பில் குயில்கள் குழறின; காகங்கள் அலறின.

இ) வாழைத் தோட்டத்தில் குயில்கள் கூவின; காகங்கள் கரைந்தன.

ஈ) வாழைத் தோப்பில் குயில்கள் கூவின; காகங்கள் கரைந்தன.

12. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

அ) எந்தச் சொல் திருக்குறளில் இடம் பெற்றுள்ளது?

ஆ) முதன் முதலில் திருக்குறளில் இடம் பெற்றது எது?

இ) எது திருக்குறளில் இடம் பெற்றுள்ளது?

ஈ) குடும்பம் என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

13. பாரதியார், எங்கிருந்து பரலி சு.நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்?

அ) புதுச்சேரி

ஆ) எட்டயபுரம்

இ) கடையம

ஈ) சென்னை

14. மயங்கொலிப் பிழை நீக்கப்பட்ட தொடரைத் தேர்க

அ) அப்பசி மாதம் அடைமலையில் ஊருணி நிரைந்தது

ஆ) ஐப்பசி மாதம் அடைமளையில் ஊறனி நிறைந்தது

இ) ஐப்பசி மாதம் அடைமழையில் ஊருணி நிறைந்தது

ஈ) ஐப்பசி மாதம் அடைமழையில் ஊரணி நிரைந்தது

Scanned by CamScanner

## பகுதி-II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும 12×2=24

### பிரிவு-1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக

15. தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது?
16. பூவில் தங்குவது எது? புலவர் பாடலில் தங்குவது எது?
17. கலிவிழா, ஒலிவிழா – விளக்குக
18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம் யாது?

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. இல்வாழ்வின் பயன் யாது?
20. திருவள்ளுவர் நேர மேலாண்மை குறித்துக் கூறுவது யாது?
21. பசுமைக் குடில் வாயுக்கள் எவை?

### பிரிவு-3

எவையேனும் ஏழுனுக்கு விடை தருக

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக
    அ. விளங்கி ஆ. உயர்ந்தோர்
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ. எத்திசை ஆ. உரனுடை
24. பொருளுணர்த்துமாறு மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக
    விளை - விலை
25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
    அ. நம் வாழ்கையின் தரம் நமதுக் கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.
    ஆ. படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனத்துடன் இருந்தால் அறிவை பெறலாம்.
26. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக
    அ. குதிரை, வேகம், ஓடு, தாவு
    ஆ. திரை, காண், கைதட்டல், மக்கள்
27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக
    அ. வழிவழியாக
    ஆ. ஆணி அடித்தாற் போல
28. எவ்வகை வாக்கியம் என்பதைக் கண்டறிக.
    அ. ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்?
    ஆ. நீச்சல் தன்னம்பிக்கையைத் தரும்.
29. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.
    அ. பூத்த மலரொன்று பறக்கிறது.
    ஆ. வானம் அழுகிறது பூமி சிரிக்கிறது.
30. கீழ்க்காணும் தொடர்களில் பயின்று வரும் சுவைகள் யாது?
    அ. தென்னிந்தியாவிலேயே முதல் தொடர்வண்டி நிலையம் அமைந்த இடம் இராயபுரமே.
    ஆ. என்னே! யோகாசனத்தின் சிறப்புகள்!

Scanned by CamScanner

7×4=28

## பகுதி-III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்

### பிரிவு-1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்"
இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. "வாயிலோயே.... எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்தை எழுதுக.
33. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதை வழி நிறுவுக.
34. இறைமகனின் எளிய நிலையாக எச்.ஏ.கிருட்டிணனார் கூறுவன யாவை?

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

35. 'கலைமுழுமை' – என்பதை விளக்குக.
36. ஒரு நகரம் உலகப் புகழ் பெறுவதற்கு வேண்டிய சிறப்புகள் யாவை?
37. திரைப்படத்தில் காட்சிகள் எவ்வாறெல்லாம் காண்பிக்கப்படுகின்றன – விளக்குக.
38. நேர மேலாண்மை குறித்து விளக்கி எழுதுக.

### பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 43-க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39. வாகைத் திணை (அல்லது) கூதிர்ப் பாசறை என்னும் துறையைச் சான்றுடன் விளக்குக.

40. **கீக்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
        பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
        உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
        கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
        தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்

-நாமக்கல் கவிஞர்

41. கவிதை புனைக ஏதேனும் ஒன்றனுக்கு
'மழை' அல்லது 'மரங்கள்'.

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக
யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது)
எறும்பு ஊரக் கல்லும் தேயும்



Scanned by CamScanner

43. அ. தமிழாக்கம் தருக.

1. Learning is a treasure that will follow its owner every were.
2. A new language is a new life
3. Knowledge of language is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

ஆ. செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:

மா.இராசமாணிக்கனாரின் தந்தை அரசுப் பணியாளர் அதனால், அவர் பல ஊர்களில் பணியாற்ற வேண்டியிருந்தது. ஆந்திர மாநில கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் நான்காம் வகுப்புவரை தெலுங்கு மொழியையே பயின்றார். இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் ஒரு தையல் கடையில் வேலைக்குச் சேர்க்கப்பட்டார். இரவில் வீடு திரும்பும்போது அந்தக் கடைக்காரர் சம்பளமாகக் காலணா கொடுப்பார். தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளியின் தலைமையாசிரியரின் பேருதவியால் தனது பதினைந்தாம் வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அனைவராலும் பாராட்டப் பெற்றார். பின்பு எழுத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் என வளர்ந்தார். இலக்கியம், வரலாறு, சமயம், கல்வெட்டு போன்ற துறைகளில் மிளிர்ந்தார்.

**வினாக்கள்:**

1. மா.இராசமாணிக்கனார் தொடக்கக் கல்வியை எங்கு பயின்றார்?
2. நான்காம் வகுப்புவரை அவர் பயின்ற மொழி யாது?
3. தையல்கடை உரிமையாளர் நாளொன்றுக்கு அவருக்கு அளித்த சம்பளம் எவ்வளவு?
4. ஆறாம் வகுப்பு முதல் ஆறு ஆண்டுகள் யாருடைய உதவியால் கல்வி பயின்றார்?

## பகுதி-IV

3×6=18

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி.

44. அ. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ. கடையெழு வள்ளல்களையும் அவர்தம் சிறப்புகளையும் சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

45. அ. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக்கோரி உங்கள் பகுதியின் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.



Scanned by CamScanner

46. அ. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ. 'தலைக்குளம்' என்னும் சிறுகதை மூலமாகக் கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருவதை விளக்குக.

## பகுதி-V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக**

அ. "வையகம் பனிப்ப"...... எனத் தொடங்கும் பாடலை எழுதுக. 1×4=4

ஆ. "அறிவு" என முடியும் குறளை எழுதுக. 1×2=2

Scanned by CamScanner

**மாதிரி வினாத்தாள் - IV**
**மேல்நிலை இரண்டாம் ஆண்டு**
**பொதுத் தமிழ்**

**கால அளவு:** 15 நிமிடங்கள் +3 மணி நேரம் **மொத்த மதிப்பெண்கள் - 90**

**அறிவுரை** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

**குறிப்பு:** 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

## பகுதி-I

**அ.அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**
**ஆ.கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக:-**

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல்
அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி
இ) சூரியநிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

2. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று
அ) புறநானூறு ஆ) அகநானூறு
இ) நெடுநல்வாடை ஈ) நற்றிணை

3. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல்....
இத்தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்
அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி
இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

4. வேறுபட்டதைக் குறிப்பிடுக
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சி துணிப்பு ஈ) காட்சி மறைவு

5. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை என்பது
அ) முகலாயக் கட்டடக் கலை
ஆ) பிரித்தானியக் கட்டடக் கலை
இ) இந்தியப் பாரம்பரியக் கட்டடக் கலை
ஈ) இவை மூன்றும் கலந்தது



Scanned by CamScanner

6. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்ட நாள்
அ) 2005இ டிசம்பர் 26
ஆ) 2005இ டிசம்பர் 24
இ) 2005இ டிசம்பர் 23
ஈ) 2004இ டிசம்பர் 23

7. தமிழில் திணைப்பாகுபாடு__________அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு
ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு
ஈ) எழுத்துக்குறிப்பு

8. பொருத்தி விடை தேர்க
க) மாச்சீர் - 1) கருவிளம்இ கூவிளம்
ங) காய்ச்சீர் - 2) நாள்இ மலர்
ச) விளச்சீர் - 3) தேமாங்காய்இ புளிமாங்காய்
ஞ) ஓரசைச்சீர் - 4) தேமாஇ புளிமா
அ) 1,2,3,4 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ)3,4,2,1

9. 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்னும் கருத்தை உணர்த்தும் கதை
அ) முதல் கல்
ஆ) தலைக்குளம்
இ) உரிமைத்தாகம்
ஈ) கோடைமழை

10. வயங்குமொழி – என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) பண்புத் தொகை
ஆ) வினைத் தொகை
இ) உவமைத் தொகை
ஈ) உம்மைத் தொகை

11. தந்தனன் - என்பதன் சரியான உறுப்பிலக்கணம்
அ) தா(த) + த்(ந்) + த் + அன் + அன்
ஆ) தா(த) + ந் + த் + அன் + அன்
இ) தந்து + அன் + அன்
ஈ) தா + ந் + தன் + அன்

12. Debit Card என்பதன் சரியான தமிழ்ச்சொல்
அ) கடன் அட்டை
ஆ) பற்று அட்டை
இ) திறன் அட்டை
ஈ) குடும்ப அட்டை

13. வானமெல்லாம் - என்னும் சொல்லின் புணர்ச்சி விதி
அ) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஆ) ஈறுபோதல்இ தன் ஒற்று இரட்டல்
இ) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

14. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?
அ) குறியீடு
ஆ) படிமம்
இ) அங்கதம்
ஈ) தொன்மம்

Scanned by CamScanner

## பகுதி-II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும் . 12×2=24

### பிரிவு-1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக

15. வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை எவை?
16. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?
17. "என்முகத்தை நான் தேடியாக வேண்டும் இப்பொழுதேனும்" இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
18. இறைமகனாரின் இன்னலைக்கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. முறை வைப்பு என்று எதனைக் கூறுவார்கள்?
20. நேர மேலாண்மையை குறிக்கும் குறளை எழுதுக.
21. மயிலை சீனி. வேங்கடசாமியின் ஆய்வுக் கட்டுரைகள் எந்தெந்த இதழ்களில் வெளிவந்தன?

### பிரிவு-3

எவையேனும் ஏழுனுக்கு விடை தருக

22. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக
    என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்க்கொண்டு தீர்ப்பார்கள்
23. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க
    உழை – உளை - உலை
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக
    பேசுவார் அல்லது வெகுளி
25. கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தருக.
    அ) Internet banking ஆ) Stapler
26. உவமைத் தொடரைத் தொடரில் அமைத்து எழுதுக
    கிணற்றுத் தவளை போல
27. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக
    அ. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்ககுட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.
    ஆ. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்
28. வெண்பாவின் ஈற்றுச்சீரில் வரும் வாய்பாடுகள் யாவை?
29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
    நிலத்தக் கௌறணும்டா அப்பத்தான் வகுறு நெறையும்
30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக
    ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

## பகுதி-III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் . 7×4=28

### பிரிவு-1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

31. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக
32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக



Scanned by CamScanner

33. கடையெழு வள்ளல்களையும் அவர்களின் கொடைச் செயலையும் அட்டவணைப்படுத்துக.
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன?
36. எழுத்தாணிகள் - குறிப்பு எழுதுக
37. வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு என்பதை இறையன்புவின் கூற்றுவழி நிறுவுக.
38. படத்தின் வெற்றியில் திரைக்கதையின் பங்கினை விவரிக்க.

பிரிவு-3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 42-க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39. சொற்பொருள் பின்வருநிலை அணி அல்லது தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

-கவிமணி தேசிக விநாயகம்

41. பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக

42. **தமிழாக்கம் தருக.**

**அ.** Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.

**ஆ. செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:**

**பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடைஎளிக்கவும்**

மா.இராசமாணிக்கனார் இளம் வயதில் தந்தையை இழந்து தமையனாரால் வளர்க்கப்பட்டார். மிகுந்த பொருளாதார நெருக்கடியில் கல்வி பயின்ற அவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்விலும் முதல் மாணவராகத் தேர்ச்சி அடைந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். பின்பு, எழுத்தார், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக பேராசிரியர் என வளர்ந்தார். அவர் இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு போன்ற துறைகளிலும் மிளிர்ந்தார். ஆய்வு நெறிமுறைகளிலும்



Scanned by CamScanner

அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளைக் கையாண்ட இவர், சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர்; சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் 'மொஹஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே.உமாமகேசுவரன், ந.மு.வேங்கடசாமி ஆகியோராலும் உ.வே சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் நெறிப்படுத்தப்பட்ட இவர் சோழர் வரலாறு பல்லவர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். 2006-2007 ஆம் ஆண்டு இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**வினாக்கள்:**

1. மா.இராசமாணிக்கனார் தமிழில் முதன்முதலில் இயற்றிய நூல் எது?
2. இவர் இயற்றிய நூல்கள் யாவை?
3. இவருடைய நூல்கள் எப்போது யாரால் நாட்டுடைமையாக்கப்பட்டன?
4. இவர் மிளிர்ந்த துறைகள் யாவை?

43. ஏதேனும் ஒரு தலைப்பு குறித்து மரபு அல்லது புதுக்கவிதை புனைக.
கல்வி அல்லது அந்திமாலை

## பகுதி-IV

3×6=18

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.**

44. அ. 'வாயிலோயே' எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் கூறும் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ. அறிவுடைமை வாழ்க்கையின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவர் வழிநின்று நிறுவுக.

45. அ. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக

(அல்லது)

ஆ. திரைப்படத்துறை கலைகளின் சங்கமம் என்பதற்குச் சான்று தந்து விளக்குக

46. அ. மாற்றம் நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும் என்பதை முதல்கல் எனும் சிறுகதை வழி எடுத்துரைக்க

(அல்லது)

ஆ. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது — விளக்குக.

## பகுதி-V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக** 1×4=4

அ. 'பாதகர்' எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல்

1×2=2

ஆ. 'மகற்கு' என முடியும் குறள்.



Scanned by CamScanner

மாதிரி வினாத்தாள் - V
மேல்நிலை இரண்டாம் ஆண்டு
பொதுத் தமிழ்

கால அளவு: 15 நிமிடங்கள் +3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் - 90

அறிவுரை 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

குறிப்பு: 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

## பகுதி-I

அ.அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:
ஆ.கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக:- 14×1=14

1. 'குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனேம்' இங்கு குறிப்பிடப்படுபவர்
அ) வாலி ஆ) சுக்ரீவன்
இ) வீடணன ஈ) குகன்

2. பொருத்தி விடை தேர்க
க) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி
உ) பயன் தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப் பெரிது
ங) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்
ச) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது
அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 1,2,3,4 ஈ) 2,3,4,1

3. இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்களின் எண்ணிக்கை
அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன் ஈ) ஏழு

4. கீழ்க்காணும் கருத்துகளுக்குத் தகுந்த விடையினைத் தேர்ந்தெடுக்க.
கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 மட்டும் சரி ஆ) கருத்து 2 மட்டும் சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) இரண்டு கருத்தும் தவறு

5. மேல் வாயிலக்கம் என்பதன் பொருள்
அ) கல்விப் பயிற்சி ஆ) பெருக்கல் வாய்பாடு
இ) பின்ன எண்களின் கீழ்த்தொகை ஈ) பின்ன எண்களின் மேல்தொகை



Scanned by CamScanner

6. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் - என்னும் குறள் குறிப்பது
அ) வேளாண் மேலாண்மை
ஆ) நேர மேலாண்மை
இ) நிருவாக மேலாண்மை
ஈ) வணிக மேலாண்மை

7. உழாஅது – என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) செய்யுளிசை அளபெடை
ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை
ஈ) உயிரளபெடை

8. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புது வெயில்' இக்கவிதையில் பயின்று வருவது.
அ) பயன் படிமம்
ஆ) வினைப் படிமம்
இ) மெய்ப் படிமம்
ஈ) உருப் படிமம்

9. களம், கலம் - என்பதற்குரிய சரியான பொருள்
அ) இடம்இ மண்
ஆ) போர்இ கப்பல்
இ) இடம்இ கப்பல்
ஈ) போர்இ மண்

10. Mini meals – என்பதன் சரியான தமிழ்ச் சொல்
அ) உணவு
ஆ) சிற்றுண்டி
இ) விரைவுணவு
ஈ) சிற்றுணவு

11. பொருள் முழுமை பெற்ற சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.
அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.
ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

12. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது
அ) புயல் அபாயக் குறியீடுகள்
ஆ) உத்தரவுக் குறியீடுகள்
இ) எச்சரிக்கைக் குறியீடுகள
ஈ) தகவல் குறியீடுகள்

13. அறிந்து – என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) பெயரெச்சம்
ஆ) வினைச்சொல்
இ) வினையாலணையும் பெயா
ஈ) வினையெச்சம்

14. ஒருமையுடன் - என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சிவிதி
அ) ஈறுபோதல்இ முன்நின்ற மெய் திரிதல்.
ஆ) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.
இ) இ ஈ ஐ வழியவ்வும்இ உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.
ஈ) ஈறுபோதல்இ இனமிகல்.



Scanned by CamScanner

## பகுதி-II

12×2=24

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்

### பிரிவு-1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக

15. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" – யார், யாரைப் பற்றி கூறியது?
16. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
17. எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே என்னும் புறநானூற்று அடிகள் நினைவூட்டும் பழமொழி யாது?
18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை?

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் யாரால் எப்போது அமைக்கப்பட்டது?
20. மீ அண்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?
21. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை – சிறுகுறிப்பு எழுதுக

### பிரிவு-3

எவையேனும் ஏழுனுக்கு விடை தருக

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக
    அ) பெருங்கடல் ஆ) பூங்கோதை

23. உரிய நிறுத்தக்குறி இட்டு எழுதுக
    இவர் சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர் சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் மொஹஞ்சொ – தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றிவர்

24. மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக
    வழிவழியாக

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
    கோவில்

26. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் எவை?

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) தொழுதனர் ஆ) செய்த

28. கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக
    அ) Conviction ஆ) Departure

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
    விடிஞ்சதும் வீட்டுக்கு ஒரு ஆள் அரிவாள், மம்பட்டியோட வாய்க்காக்கரைக்கு வந்திடணும்

Scanned by CamScanner

30. உரிய இடங்களில் வேற்றுமை உருபினைச் சேர்த்து எழுதுக
முருகன் வேகம் சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை

## பகுதி-III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 7×4=28

### பிரிவு-1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

31. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? – குறள்வழி விளக்குக
32. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
33. யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் தருக.
36. சென்னை நகரம் உருவாக்கம் பெற்றமையை விவரிக்க.
37. குலஷோவ் விளைவு – குறிப்பு வரைக
38. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் குறித்து எழுதுக.

### பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

39. உவமை அணி அல்லது ஏகதேச உருவக அணியைச் சான்றுதந்து விளக்குக

40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி
-கண்ணதாசன்

41. நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.
42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு பொருத்தி எழுதுக.
யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43. **பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடைளிக்கவும்**
சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள



Scanned by CamScanner

வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்தல் பேசும் போக்கினைக் காணமுடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' எனவும் திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனவும் வழங்கப் பெற்றுள்ளன.

**வினாக்கள்:**

1. வேறுபட்ட வாழ்விடங்களைக் குறிக்கும் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்தெழுதுக
2. தம்மனை, நும்மனை என்பன எவற்றைக் குறிக்கின்றன?
3. புக்கில் - பொருள் தருக
4. தன்மனை என்பதன் பொருள் யாது?

3×6=18

## பகுதி-IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி.**

44. அ. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ. சிறுபாணாற்றுப்படை கூறும் கடையெழு வள்ளல்களுள் இருவரின் கொடை குறித்து விவரிக்க.

45. அ. கவிதையின் நடையைச் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக் காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக

46. அ. தலைக்குளம் சிறுகதையின் மூலம் நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்க

(அல்லது)

ஆ. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி-V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக**

அ. 'குழல் வழி' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல் 1×4=4

ஆ. 'மிகும்' என முடியும் குறள். 1×2=2

Scanned by CamScanner

## மாதிரி வினாத்தாள் - VI
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## பொதுத் தமிழ்

கால அளவு: 15 நிமிடங்கள் +3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் - 90

அறிவுரை 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

குறிப்பு: 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி-I

14×1=14

அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:

ஆ. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:-

1. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?
அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி

2. வளைஇ - இலக்கணக் குறிப்பு
அ) அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

3. சங்கச் சமூகத்தின் அடிப்படை அலகு
அ) கணவன் ஆ) மனைவி இ) திருமணம் ஈ) குடும்பம்

4. சீதாள பத்திரம் என்பது
அ) தாழை மடல ஆ) நெல்தாள இ) கம்பந்தட்டை ஈ) பனையோலை

5. சிறுபாணாற்றுப்படை பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம்
இ) திண்டிவனம ஈ) தருமபுரி

6. தென்னிந்தியாவில் முதன்முதலில் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட இடம்
அ) எழும்பூர் ஆ) இராயபுரம்
இ) தாம்பரம் ஈ) வேளச்சேரி

7. கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர்
அ) எச்.ஏ.கிருட்டிணனார் ஆ) ஜான்பன்யன்
இ) ஜி.யு.போப் ஈ) க.கிருஷ்ணமூர்த்தி



Scanned by CamScanner

8. தொல்நெறி – என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை
ஆ) உவமைத்தொகை
இ) பண்புத்தொகை
ஈ) உம்மைத்தொகை

9. பிழையான தொடரைக் கண்டறிக
அ) காளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின

10. "ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம்; மகாமௌனம்" - இந்த அடிகளில் புலப்படுவது
அ) இரைச்சல்
ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல்
ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

11. 'ஈறு போதல்' – என்ற விதி பயின்று வரும் சொல்
அ) உரனுடை ஆ) நன்மொழி இ) முன்னுடை ஈ) ஏழையென

12. வாழ்வை முழுமையாக்கும் கூறுகளில் முதன்மையானது
அ) ஓவியம் வரைவது
ஆ) புத்தகம் வாசிப்பது
இ) உடற்பயிற்சி செய்வது
ஈ) பயணம் செய்வது

13. சரியான எழுத்து வழக்கைத் தேர்ந்தெடுக்கவும்
அ) இப்ப எனக்குப் புரிஞ்சிச்சி நீயும் புரிஞ்சிக்க
ஆ) இப்போ எனக்குப் புரிஞ்சிருச்சி நீயும் புரிஞ்சிக்கோ
இ) இப்போ எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்
ஈ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்

14. உரிய நிறுத்தற்குறி அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்கவும்
அ) "நீங்கள் கொடுத்து வைத்தவர்" என்று ஆசி கூறினார்.
ஆ) 'நீங்கள் கொடுத்து வைத்தவர்'என்று ஆசி கூறினார்.
இ) 'நீங்கள் கொடுத்து வைத்தவர்!" என்று ஆசி கூறினார்.
ஈ) 'நீங்கள் கொடுத்துவைத்தவர்!' என்று ஆசி கூறினார்.

## பகுதி-II

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்

### பிரிவு-1

12×2=24

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக

15. தமிழ் மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?
16. வசனம், கவிதை – வேறுபாடு தருக
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு வரைக
18. குளிர்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் எவ்வாறு நடுங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது?



Scanned by CamScanner

## பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் பற்றி எழுதுக

20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு வரைக

21. 'பருவத்தே பயிர் செய்' – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக

## பிரிவு-3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக

22. ஏதேனும் ஒன்றனுக்குப் மட்டும் பகுபதஉறுப்பிலக்கணம் தருக.
    அ) ஈந்த ஆ) தாங்கிய

23. ஏதேனும் ஒன்றனுக்குப் மட்டும் புணர்ச்சி விதி தருக
    அ) இனநிரை ஆ) புதுப்பெயல்

24. பொருளுணர்ந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக
    அலை, அழை

25. பிழை நீக்கி எழுதுக
    அ) கோவலன் மதுரைக்குச் சென்றது
    ஆ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

26. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக
    அ) நல்லன செய்யின__________
    ஆ) உண்ணாது நோற்பார__________

27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
    அ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போகச் சொல்
    ஆ) நிலத்தைக் கௌறனும்டா அப்பதான் வகுறு நெறையும்

28. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தொடருக்கு ஏற்ப மாற்றுக
    அ) கபிலர் திறமையானவர் என்று__________ (குமார்) தெரியும்.
    ஆ) நம்முடைய__________ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பொங்கும்.

29. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக
    அ) ஆறஅமர
    ആ) வழிவழியாக

30. ஏற்ற வினா அமைக்க
    குடும்பம் என்ற சொல் முதல்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

## பகுதி-III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 7×4=28

## பிரிவு-1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

31. "மூன்றான காலம் போல் ஒன்று" – எவை? ஏன்?

32. கடையெழுவள்ளல்களையும் அவர்கள் செய்த அருஞ்செயல்களையும் அட்டவணைப்படுத்துக

33. "எங்கிருந்தோ வருகிறது
    வண்ணத்துப் பூச்சியொன்று" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக

34. குகனொடு ஐவராகி, வீடணனொடு எழுவரான நிகழ்வுகளை விளக்குக



Scanned by CamScanner

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

35. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. கவிதை மறுதலைத்தொடரைச் சான்றுடன் விளக்குக

37. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலைச் சான்றுடன் புலப்படுத்துக

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் அறிவன யாவை?

பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

குறிப்பு: செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண்-43க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

39. பொருள் வேற்றுமை அணி (அல்லது) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக

40. கீழ்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களைப் பாராட்டுக.

முச்சங்கம் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி
-கண்ணதாசன்

41. கவிதை புனைக
காடு (அல்லது) நட்பு

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்
அல்லது
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

43. அ. கீழ்க்கண்ட பத்தியைப் படித்து அதிலுள்ள ஏதேனும் எட்டு ஆங்கிலச் சொற்களுக்கு தமிழாக்கத்தை எழுதுக

In terms of human development objectives, education is an end in itself, not just a mean[s to] an end. Education is a basic human right. It is also the key which opens many economi[c,] social and political doors. for people. It increases access to income employme[nt] opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of t[he] economic rates of return.

ஆ. செவி மாற்றுத்திறனாளி மாற்று வினா

இரசிகமணி டி.கே.சிதம்பரநாதர் வழக்கறிஞராகப் பணியாற்றினார். தமது இலக்கிய இரசிக[த்] தன்மையால் தமிழுக்கும் தமிழறிஞர்க்கும் புத்துணர்வு ஊட்டினார். டி.கே.சி இலக்கிய சுவைகளைப் பேசப்பேச அவையோர் தம்மை மறந்து கேட்டிருப்பார். அவரது வீட்டி[ல்] கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில் உண்டு. அந்த இடத்தில் ஞாயிறு தோறு[ம்] இலக்கியக் கூட்டம் நடைபெற்றல் அவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெற்றது. டி.கே[.சி] அவர்கள் சென்னை மாநில மேலவை உறுப்பினராகவும், அறநிலையத்துறை ஆணையராக[வு]



Scanned by CamScanner

செயல்பட்டார். இலக்கிய ஆர்வம் காரணமாக இதய ஒலி, கம்பர் யார்? ஆகிய நூல்களை இயற்றினார்.

வினாக்கள்:

1. டி.கே.சிதம்பரநாதர் ஆற்றிய பணி யாது?
2. வட்டத் தொட்டி என்பது யாது?
3. பேசப் பேச - இலக்கணக் குறிப்பு எழுதுக
4. டி.கே.சி இயற்றிய நூல்கள் யாவை?

## பகுதி-IV

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3×6=18

44. அ. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன நிறுவுக.

45. அ. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

ஆ. உலகப் புகழ்பெற்ற சென்னை அறிவின் நகரம், பண்பாட்டின் அடையாளம், நம்பிக்கை நகரம் என்பதை விளக்குக.

46. அ. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலன்களை விவரிக்க

(அல்லது)

ஆ. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக

## பகுதி-V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

அ. "பாதகர் குழுமி"....எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல 1×4=4

ஆ. "மகற்கு"....என முடியும் குறட்பா. 1×2=2

Scanned by CamScanner